1972 மார்ச் 3]

திரு. எஸ். வடிவேல் : தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலுக்கு எவ்வளவு ஏக்கர் நிலம் இருக்கிறது? எவ்வளவு காணுமல் போய் விட்டது? அப்படிக் காணுமல் போய்விட்ட நிலங்கள் கிடைத்து விட்டதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஏற்கெனவே இருக்கின்ற நிலங்களின் அளவு பற்றிச் சொன்னேன். நஞ்சை 42 ஏக்கர் 5 சென்ட்; புஞ்சை 118 ஏக்கர் 80 சென்ட்.

திரு. கோவை செழியன் : தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில் தமிழக அரசின் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறதா அல்லது மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கிறதா? ராஜராஜ சோழன் சிலை வைக்கின்ற விஷயம் என்ன வாயிற்று?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாநில சுயாட்சிக்கு இறைவனும் அருள் புரிய வேண்டும்.

அரிசனங்களுக்குக் குடியிருப்புகள்

* 281 வினு.—திரு. கே. என் குமாரசாமி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடை யளிப்பாரா—

அரிசனங்களுக்கு கூட்டுறவுத் துறையின் மூலம் வீடுகள் கட்ட, பணம் வழங்கும் திட்டம் தற்போது செயல்படுகிறதா?

மாண்புமிகு திருமதி சத்தியாவாணிமுத்து : தற்போது இல்லை. இக் கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. என். குமாரசாமி : கூட்டுறவு முறையில் வீடுகள் கட்ட பணம் வழங்கும் திட்டம் சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டு பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அரிசன மக்கள் இந்தத் திட்டம் எப்போது வரும் என்று எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதிலே அரசு சீக்கிரமாக முடிவு எடுக்குமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இன்னும் சில மாதங்களில் முடிவு எடுத்து அறிவிக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : அந்தத் திட்டத்தை எந்த முறையில் கொண்டு வருவது என்று அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறது? இப்போது பெரும்பகுதி நிலங்கள் வீட்டு மனையாக வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த மனைகளை ஈடாக வைத்துக் கொண்டு நகரங்களில் கடன் கொடுப்பது போன்று கிராமப் புறங்களிலும் எல்.ஐ.சி. கடனைப் பெற்றோ அல்லது பாங்குகளின் மூலமாகவோ கூட்டுறவு முறையில் பணம் கொடுக்க அரசு சீக்கிரத்தில் முடிவு எடுக்குமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : எல்.ஐ.சி. கடன் உதவி பெற்று ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து அதன் மூலம் அவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்பதுதான் இப்போது அரசின் பரிசிலனையில் இருக்கிறது. விரைவில் முடிவு எடுக்கப்பட்டு அமலுக்கு வரும்.

மணல்மேட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலை

* 283 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

மாயூரம் மணல்மேடு கூட்டுறவு நூற்பாலையில் 1970-க்குப் பின்னால் எத்தனை பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டனர்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாயூரம் தாலுக்கா மணல் மேட்டிலுள்ள தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலையில் 31—12—1970க்குப் பின்னால் 11 தொழிலாளிகள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். பின்னர் இதில் 10 பேர்கள் மறுபடியும் வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டு விட்டார்கள்.

Vanaspathi factory

* 284 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to start a vanaspathi factory in the State; and

(*b*) if so, the details of the same?